கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அருப்புக்கோட்டை

அசல் வழக்கு எண். 129/2010

வாதியின் சாட்சி என்பவரின் வாக்குமூலம் (1873ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44-வது பிரிவு 5வது விதியின் ஏற்பாட்டின்படி ) என்னால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: முகமதுஅலி<br>த/பெ. க/பெ :<br>கிராமம் :<br>தாலுகா : | சாதி :<br>மதம் :<br>தொழில் :<br>வயது : |

25.07.2019

வா.சா.1

முதல் விசாரணை:

நான் இவ்வழக்கின் வாதி. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு பற்றி தெரியும். நான் தாக்கல் செய்துள்ள பிரமாணவாக்குமூலத்தை நான் படித்துப்பார்த்து கையொப்பம் செய்தேன். அதிலுள்ள விபரங்கள் நன்கு தெரியும். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சான்றாவணங்களை வாதி தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன். 14.03.1923 தேதியிட்ட மைதீன் ராவுத்தர் வகையறாவிற்கு அம்பலம் பாட்ஷா மைதீன் ராவுத்தர் எழுதிக்கொடுத்த கிரைய பத்திரம் அசல் வா.சா.ஆ.1. 03.03.2010 தேதியிட்ட அருப்புக்கோட்டை துணை வட்டாட்சியர் கொடுத்த டவுண் சர்வே ரெஜிஸ்டர் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.2. 09.08.1962 தேதியிட்ட எனது தகப்பனார் ரசூல்முகைதீன் மாநகராட்சி கொடுத்த மனுவின் நகல் வா.சா.ஆ.3. 16.08.1962 தேதியிட்ட மாநகராட்சி ஆணையாளர் அனுப்பிய கடிதம் வா.சா.ஆ.4. 20.10.1962 தேதியிட்ட மாநகராட்சி ஆணையாளர் அனுப்பிய உத்தரவு வா.சா.ஆ.5. 06.04.2010 தேதியிட்ட வில்லங்க சான்றிதழ் வா.சா.ஆ.6. 08.03.2010 தேதியிட்ட வழக்கு அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ.7. அதனை முதல் பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அட்டை வா.சா.ஆ.8. முதல் பிரதிவாதியின் பதிலறிவிப்பு வா.சா.ஆ.9. 05.10.1919தேதியிட்ட பாஷாமைதீன் ராவுத்தருக்கு சாந்துக்கான் ராவுத்தர் வகையறா எழுதிக்கொடுத்த கிரைய பத்திரம் அசல் வா.சா.ஆ.10. 12.03.1984 தேதியிட்ட அஸமதுபேகம் அவர்களுக்கு ரசூல்மைதீன் எழுதிக்கொடுத்த கிரைய பத்திரம் சார்பதிவாளர் நகல் வா.சா.ஆ.11. 17.04.1976, 19.04.1976 ஆகிய தேதிகளில் வா தியின் தகப்பனாருக்கு வந்த சர்வே நோட்டீஸ் வா.சா.ஆ.12 மற்றும் 13. பரிமள ஜமாத்திலிருந்து வாதிக்கு அனுப்பிய கடிதம் வா.சா.ஆ.14. பரிமளஜமாத் தைக்கால் பராமரிப்பு பெயரில் உள்ள இந்தியன் வங்கி, பாஸ்புத்தகம் வா.சா.ஆ.15. பரிமளஜமாத் தீர்மானங்கள் அடங்கிய புத்தகம் வா.சா.ஆ.16. பரிமளஜமாத் சொத்து சம்பந்தமாக வாதியின் தகப்பனார் எடுத்துக்கொண்ட

நடவடிக்கை விவரங்களும் அதற்கான வரவுசெலவு புத்தகம் வா.சா.ஆ.17. அருப்புக்கோட்டை மாவட்ட உரிமையியில் நீதிமன்றத்திலுள்ள அசல் வழக்கு எண்.180/2009ன் பிராது அலுவலக நகல் வா.சா.ஆ.18. அதே வழக்கின் எதிர்வழக்குரை வா.சா.ஆ.19.

வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.